தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை – 6

<u>ந.க.எண். 68822/சி5/இ4/2022, நாள்.29.02.2024.</u>

பொருள்: தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி – 01.01.2024 நிலவரப்படி உடற்கல்வி ஆசிரியர் பணிநிலையில் இருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை – II ஆக பதவி உயர்வு பெற தகுதி வாய்ந்தவர்களின் தேர்ந்தோர் பட்டியல் தயார் செய்யப்பட்டது – அனுப்பி வைத்தல் – கலந்தாய்வில் கலந்து கொள்ள தகவல் தெரிவிக்க கோருதல் – சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக்கல்வி சார்நிலைப்பணி சிறப்பு விதிகள் வெளியிடப்பட்ட அரசாணை எண் 13 பள்ளிக் கல்வித் துறை, நாள் 30.01.2020.
2. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் (நாட்டு நலப்பணித்திட்டம்) மற்றும் இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) (கூ.பொ) செயல்முறைகள், ந.க.எண்.68822/எம்/இ3/2022, நாள்.03.11.2023.
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் இதே எண்ணிட்டது நாள்.15.02.2024.
4. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

******

பார்வை 3–ல் காணும் செயல்முறைகளின்படி, 01.01.2023 நிலவரப்படி உடற்கல்வி ஆசிரியர் பணிநிலையில் இருந்து உடற்கல்வி இயக்குநர் நிலை – II ஆக பதவி உயர்வு வழங்க தகுதி வாய்ந்தோரின் உத்தேச பெயர்ப் பட்டியலினை அனுப்பி அதனை சரிபார்த்து அனுப்பிடவும் 01.01.2024 நிலவரப்படி தகுதி வாய்ந்தவர்கள் இருப்பின் அவர்களை சேர்த்திடவும் கருத்துருக்கள் அனுப்புமாறு அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களிடம் கோரப்பட்டு, அதனடிப்படையில் பெறப்பட்ட கருத்துருக்களின் அடிப்படையில் தயார் செய்யப்பட்ட தேர்ந்தோர் பட்டியல் இத்துடன் இணைத்து அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

இப்பட்டியலில் உள்ள உடற்கல்வி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு கலந்தாய்வு 02.03.2024 அன்று காலை 10.00 மணி முதல் EMIS இணையதளத்தின் மூலம் நடைபெற உள்ளதால், பட்டியலில் உள்ள அனைத்து ஆசிரியர்களும் கலந்தாய்வில் கலந்து கொள்ள தக்க அறிவுரைகள் வழங்கிடவும், காலிப்பணியிட விவரங்களை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்திடவும், மின்தடை ஏற்படாமல் கணினி இணையதள வசதிகள் ஏற்பாடு செய்திடவும், எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் செயல்படுமாறும் அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு : தேர்ந்தோர் பட்டியல்

ஒப்பம்/–
த.ராஜேந்திரன்
இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர் :
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.